மூடிய கதவுகளுக்குப்பின் ரகசியமாக நியமிக்கப்படுகின்றனர்!

நீதிபதிகளை நியமிப்பது கொலீஜியம் அல்ல, பிரதமர்தான்!

ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி கே.சந்துரு குற்றச்சாட்டு!

புதுடெல்லி,அக்.12-

இந்தியாவில் உயர் நீதிமன்றங்கள் மற்றும் உச்ச நீதிமன்ற நீதிபதிகளை தேர்வு செய்யும் கொலீஜியம் முறையில் வெளிப் படைத்தன்மை இல்லை என்றும், உண்மையில் இந்த நீதிபதிகள் அனைவரும் பிரதமர் நரேந்திர மோடியால்தான் நேரடியாக நீய மிக்கப்படுகிறார்கள் என்றும் சென்னை உயர் நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி கே.சந்துரு தெரிவித்துள்ளார்.

சென்னையில் நடைபெற்ற கருத்தரங்கம் ஒன்றில் அவர் பேசிய இந்த கருத்துகள் தற்போது நாடு முழுவதும் பெரும் விவாதத் தைக் கிளப்பியுள்ளன.

சென்னையில் உள்ள ஏசியன் காலேஜ் ஆஃப் ஜர்னலிசம் (ACJ) கல்வி நிறுவனம் சார்பில், "நீதிபதி களை யார் எடைபோடுவது?" (Who Will Judge the Judges) என்ற தலைப்பில் ஒரு சிறப்புக் கருத்தரங் கம் நடைபெற்றது. நீதிபதிகள் நிய மனம், நீதிமன்றங்களின் செயல் பாடு மற்றும் சமூகப் பிரதிநிதித்துவம் குறித்து இந்த நிகழ்வில் மூத்த சட்ட வல்லுநர்கள் விரிவாக விவாதித்தனர்.

நிகழ்ச்சியில் முக்கிய உரையாற் றிய ஓய்வுபெற்ற நீதிபதி கே.சந் துரு, நீதிபதிகள் நியமனத்தில் ஒன் றிய அரசின் மறைமுகத் தலையீடுகள் குறித்துப் பேசினார்.

"2014-ஆம் ஆண்டு மத்தியில் பாஜக தலைமையிலான நரேந்திர மோடி அரசு ஆட்சிக்கு வந்ததும், தேசிய நீதிபதிகள் நியமன ஆணை யச் சட்டத்தை கொண்டுவர முயற்சி செய்தது. ஆனால், அந்தச் சட் டம் அரசியல் சாச னத்திற்கு எதிரானது என்று உச்ச நீதிமன் றம் அதை ரத்து செய் துவிட்டது.



அ ந் த த் தீர்ப்பிற்குப் பிறகு, உயர் நீதிமன்ற மற் றும் உச்ச நீதிமன்ற நீதிபதிகள் அனைவரையும் கொலீ ஜியம் தேர்வு செய்வதற்குப் பதி லாக, உண்மையில் பிரதமர் மோடியே நேரடியாக நியமித்து வருகிறார். NJAC சட்டத்தை மீண் டும் கொண்டுவர அரசு எந்த முயற் சியும் எடுக்கவில்லை. ஏனெனில், அந்த ஆணையத்தை விட தங்க ளுக்குச் சாதகமான, அதிக பலன் தரக்கூடிய வேறு குறுக்கு வழி களை அரசு இப்போது கண்டுபி டித்துவிட்டது" என்று நீதிபதி சந் துரு கூறினார்.

தொடர்ந்து தற்போது நடைமு றையில் இருக்கும் 'கொலீஜியம்' முறையையும் நீதிபதி சந்துரு கடு மையாக விமர்சித்தார்.

"உச்ச நீதிமன்றத்தில் 38 நீதிபதி களும், மாநில உயர் நீதிமன்றங்களில் சுமார் 1,000 நீதி பதிகளும் பணியாற்றுகிறார்கள். இவர்களைத் தேர்வு செய்யும் கொலீஜியம் முறைக்கு இந்திய அர சியல் சாசனத்தில் எந்தவிதமான அங்கீகாரமும் கிடையாது. யாருக் குமே எதுவும் தெரியாமல், மூடிய கதவுகளுக்குப் பின்னால் ரகசிய மாக இந்த நியமனங்கள் நடக் கின்றன. இந்தியாவி லேயே மிகக் கவனமா கப் பாதுகாக்கப்படும் மிகப்பெரிய ரகசியம் இந்த கொலீஜியம் முறைதான்.

நீதிபதிகளே நீதிபதி களை நியமித்துக் கொள்ளும் ஒரு விசித் திரமான முறை உலகத்தில் வேறு எங்குமே இல்லை. மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் ஜனநாயக நாடுகள் எதிலும் இதுபோன்ற ஒரு பழக்கம் கிடையாது; இந்தியாவில் மட்டும்தான் இது நடக்கிறது" என்று அவர் சுட்டிக்காட்டினார்.

பங்கேற்றோர் எச்சரிக்கை!

இதற்கிடையே கொலீஜியம் முறையில் யாருக்குப் பதவி வழங் கப்படுகிறது, எந்த அடிப்படையில் தேர்வு செய்யப்படுகிறார்கள் என் பது மக்களு க்குத் தெரிவதில்லை. அதே நேரத்தில், ஒன்றிய அரசு தங் களுக்கு வேண்டியவர்களை மட் டுமே அங்கீகரித்து மற்ற பெயர்க ளைத் தாமதப்படுத்துகிறது என்ற குற்றச்சாட்டும் நீண்ட நாட்களாக இருந்து வருகிறது.

நீதிபதிகள் நியமனம் நேர்மை யாகவும் வெளிப்படையாகவும் நடக்கா விட்டால், அது நாட்டின் ஒட்டுமொத்த நீதி வழங்கல் முறை யையே பாதிக்கும் என்பதை இந்த கருத்தரங்கில் பேசிய பேச்சா ளர்கள் எச்சரித்துள்ளனர்.

சிவகங்கை மாவட்டத்தில்

மாநகர, ஒன்றிய, நகர, பேரூர்க் கழக சீரமைப்புப் பணிகள்!

மாவட்டச் செயலாளர் கே.ஆர்.பெரியகருப்பன் அறிவிப்பு!

சிவகங்கை, அக்.12-

சிவகங்கை மாவட்டக் கழகச் செயலாளர் - முன் னாள் அமைச்சர் கே.ஆர். பெ ரி ய க ரு ப் ப ன் விடுத்துள்ள அறிக்கை வரு மாறு:-

சிவகங்கை மாவட்டம் தலைமைக் கழக பிரதிநிதி கள் தங்கபாண்டியன் மற் றும் மாநில இளைஞரணி துணை அமைப்பாளர் இளைராஜா ஆகியோர் கீழ்க்கண்ட அட்ட வ ணைப்படி ஒன்றிய, நகர, பேரூர்க் கழகம் மற்றும் மாநகராட்சிக்கான சீர மைப்பு பணிகள் மேற் கொள்ள உள்ளார்கள். அது சமயம் ஒருங்கி ணைந்த ஒன்றிய, மாநகர, நகர, பேரூர்க் கழக நிர்வா கி க ள் ம ற் று ம் முக்கியஸ்தர்கள் கலந்து கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

கூட்ட நடைபெறும் நாள், நேரம், ஒன்றிய, நக ரம், பேரூர், இடம் விவரம் வருமாறு:

14.10.2026-காலை 9 மணி- சிங்கம்புணரி ஒன்றி யம், சிங்கம்புணரி பேரூர், காலை 11 மணி - எஸ். புதூர் ஒன்றியம் - அண்ணா மன்றம், சிங்கம்புணரி,

மாலை 3 மணி, திருப் பத்தூர் ஒன்றியம், திருப் பத்தூர் பேரூர், நெற்குப்பை, மாலை 6 மணி - கல்லல் ஒன்றியம் (கிழக்கு , மேற்கு) - மாவட்ட கழக அலுவலகம் திருப்பத்தூர்.

15.10.2026 - காலை 9 மணி-காரைக்குடி மாநக ராட்சி, காலை 11 மணி- சாக்கோட்டை கிழக்கு, மேற்கு புதுவயல், கண்ட லூர் பேரூர், கோட்டை யூர், பள்ளத்தூர் பேரூர், கானாடுகாத்தான் பேரூர், மாலை 3 மணி - கண்ணங்



குடி ஒன்றியம், மாலை 4- தேவகோட்டை நகராட்சி, மாலை 6 - தேவகோட்டை வடக்கு தெற்கு - மாவட் டக் கழக அலுவலகம், காரைக்குடி.

16.10.2026 - காலை 9 மணி- சிவகங்கை நக ராட்சி, காலை 11 மணி - சிவகங்கை வடக்கு, தெற்கு, மேற்கு, மாலை 3 மணி - காளையார் கோவில், வடக்கு, தெற்கு, கிழக்கு, நாட்டரசன் கோட்டை, பேரூர் - சிவ கங்கை நகர் மற்றும் ஒன் றிய கழக அலுவலகம், சிவ கங்கை.

17.10.2026-காலை 9 மணி - மானாமதுரை நகர், காலை 11 மணி - திருப்புவனம் கிழக்கு, மேற்கு, தெற்கு, திருப்புவனம் பேரூர், மாலை 3மணி - இளை யான்குடி வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு, இளை யான்குடி பேரூர் -மாலை 6 மணி - மானாமதுரை கிழக்கு, மேற்கு தெற்கு- அனுசியா திருமண மண்ட பம், மானாமதுரை.

18.10.2026-காலை 10 மணி - மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம் - மாவட்டக் கழக அலுவல கம், காரைக்குடி.

இவ்வாறு அவர் தெரி வித்துள்ளார்.

பெண்களுக்குப் பாதுகாப்பில்லை! ரீல்ஸ் போடும் த.வெ.க. அரசு

மனமகிழ் மன்றங்களை திறப்பதுதான் மாற்றமா?

முன்னாள் அமைச்சர் கீதாஜீவன் கண்டனம்!

தூத்துக்குடி, அக். 12 -

தூத்துக்குடியில் மனம கிழ் மன்றங்கள் திறப்ப தற்கு கண்டனம் தெரிவித் துள்ள முன்னாள் அமைச் சர் கீதா ஜீவன், மதுக்கடை களை மூடிவிட்டு மனமகிழ் மன்றங்களை திறப்பது தான் மாற்றமா என விஜய் அரசிற்கு சரமாரியாக கேள்வி எழுப்பி உள்ளார்.

முன்னாள் அமைச்சர் கீதா ஜீவன் விடுத்துள்ள சமூக வலைதளப்பதிவில்,

தூத்துக்குடியில் தற் போது செயல்பட்டு வரும் டாஸ்மாக் கடைகளின் விற்பனையை வேகப்படுத் தும் நோக்கில் கூடுதலாக 5 முதல் 6 விற்பனை கவுண் டர்களை திறந்து காவல்



துறை பாதுகாப்போடு மது விற்பனையை நடப்பதாக குற்றம் சாட்டியுள்ளார். தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு சீரழிந்து வருகிறது பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை ஆனாலும் காவல் துறையினரை மதுக்கடை பாதுகாவலர்கள் போல பயன்படுத்துவது வெட்கக் கேடு என

முன்னாள் அமைச்சர் கீதா ஜீவன் கண்டனம் தெரிவித்துள்ளார். திமுக ஆட்சியில் தூத்துக்குடி மாவட்டத்தில் மனமகிழ் மன்றத்திற்கு முற்றிலுமாக அனுமதி மறுக்கப்பட்ட நிலையில், தற்போது பள்ளி குழந்தைகள் நடமாட்ட முள்ள தூத்துக்குடியில் இந்திரா நகர் பகுதியில் மனமகிழ் மன்றத்தை அமைக்க அரசு முடிவு செய்திருப்பது கண்டிக்க தக்கது என அவர் கூறியுள்ளார். 'கணிசமான எண்ணிக்கையில் மதுக்க டைகளை மூடிவிட்டோம்' என ரீல்ஸ் போடும் தவெக அரசு, மனமகிழ் மன்றங்களை திறக்க துடிப்பது ஏன்? என அவர் வினவியுள்ளார். மதுக் கடை விவகாரத்தில் பெண் களின் கோரிக்கையை நிறைவேற்றுவது போன்ற தோற்றத்தை உருவாக்கி விட்டு வழக்கம்போல முத லமைச்சர் விஜய் அந்தர் பல்டி அடித்திருப்பதாக குற்றம் சாட்டியுள்ள முன் னாள் அமைச்சர் கீதாஜீவன், மதுக்கடை களை மூடிவிட்டு மனம கிழ் மன்றங்களை திறப்பது தான் மாற்றமா என தவெக அரசை விமர்சித்துள்ளார்.

சேலம் மத்திய மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

மாவட்டக் கழகச் செயலாளர் இரா. இராஜேந்திரன் அறிக்கை!

சேலம், அக்.12-

சேலம் மத்திய மாவட் டக் கழக செயற்குழுக் கூட் டம்15.10.2026ஆம் நாள் வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு மாவட்டக் கழக அலுவலகமான"கலை ஞர் மாளிகை"யில்,தலை மைக் கழக பிரதிநிதி, மாநி லங்களவை உறுப்பினர் வழக்கறிஞர் கிரிராஜன்



தலைமையிலும், தலைமைக் கழக பிரதிநிதி தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணைச்செயலாளர் அழகிரி சதாசிவம்மற்றும்மத்தியமா வட்டக்கழகஅவைத்தலை வர் ஜி.கே.சுபாசு ஆகியோர் முன்னிலையிலும் நடை பெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாவட் டக் கழக நிர்வாகிகள், மாநகர கழக நிர்வாகிகள், தலைமைச்செயற்குழுபொ துக்குழு உறுப்பினர்கள், ஒன்றியக் கழகச் செயலா ளர்கள், பகுதிகழக செயலா ளர்கள், பேரூர்கழக செய லாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

மிரட்டல்களுக்கு ஒருபோதும் அஞ்ச மாட்டோம்:

சர்வாதிகாரத்தின் முடிவு தொடங்கிவிட்டது!

கரப்பான்பூச்சி ஜனதா கட்சி நிறுவனர் அபிஜீத் திப்கே கண்டனம்!

புதுடெல்லி,அக்.12-

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகளில் முறை கேடு செய்ததாக குற்றம் சாட்டி தலைமை தேர்தல் கமிஷனர் ஞானேஷ் குமார் பதவி விலகக்கோரி கரப்பான் பூச்சி ஜனதா கட்சியினர் போராட்டம் நடத்தி வருகி றார்கள்.

இந்த கோரிக்கையை வலி யுறுத்தி கடந்த 2-ந்தேதி காந்தி ஜெயந்தி அன்று மும் பையில் அவர்கள் போராட் டம் நடத்தினார்கள். ஏற்க னவே தங்களது போராட்டத்தால் மத்திய கல்வி மந்திரியை பதவி விலக வைத்த செயல், அவர்களை இந்த போராட்டத்துக்கு மேலும் ஊக்கப்படுத்தியது.

இதனால் அக் 10-ந்தேதி டெல்லியில் மிகப்பெரிய அளவில் போராட்டம் நடை பெறும் என அறிவித்து இருந் தனர். போராட்டத்தை முறி யடிப்பதற்காக போலீசார் டெல்லியில் பல்வேறு கட் டுப்பாடுகளை அறிவித்தனர். முதலாவதாக கரப்பான் பூச்சி கட்சியினரின் போராட்டத் துக்கு அனுமதி மறுக்கப் பட்டது.

இதற்கிடையே மும்பை யில் இருந்து இந்த போராட் டத்துக்காக புறப்பட்ட கரப் பான் பூச்சி ஜனதா கட்சியின் நிறுவனர் அபிஜீத் திப்கே, பிற நிர்வாகிகள் சவுரவ் தாஸ், அசுதோஷ் ரங்கா ஆகியோர் டெல்லி விமான நிலையத்துக்கு நேற்று காலை 10:30 மணி அளவில் வந்த னர். இதனை முன்கூட்டியே அறிந்திருந்த போலீசார் அந்த விமானத்துக்குள்ளேயே ஏறி அவர்களை கைது செய்தனர்.

இந்த நிலையில், டெல்லி யின் கண்டோன்மென்ட் காவல் நிலையத்தில் சிஜேபி தலைவர்களான அபிஜீத்



தீப்கே, அசுதோஷ் ரங்கா மற் றும் சௌரவ் தாஸ் ஆகி யோர் நீதிபதி முன் நேற்று ஆஜர்படுத்தப்பட்டனர். அவர்கள் 3 பேரை விடுவிக்க நீதிபதி உத்தரவிட்டார். ஓராண்டு காலம் அமைதிக்கு இடையூறு செய்யக்கூடாது என்ற நிபந்தனையின் அடிப் படையில் அவர்கள் விடுவிக் கப்பட்டுள்ளனர்.

இதனை தொடர்ந்து சர்வ திகாரத்தின் முடிவு தொடங் கிவிட்டது என அபிஜீத் திப்கே கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் எக்ஸ் தள பதிவில்,

மோடி பிரதமராக இருப் பது இந்தியாவுக்கு அவமா னம். நாட்டில் இதுவரை இவ் வளவு பெரிய கோழையையும், அதிகாரத் தைப் பயன்படுத்தி மிரட்டுப வரையும் பார்த்ததில்லை. "இந்தத் துயரமான நேரத்தில் எனது குடும்பத்தினருடன் இருக்க எனது சொந்த கிரா மத்துக்குத் திரும்பிச் செல்கி றேன். டெல்லியில் சவுரவ் மற்றும் ஆஷு ஆகியோர் விரைவில் செய்தியாளர் சந் திப்பை நடத்துவார்கள்.

சிஜேபி அமைப்பு ஒரு போதும் பின்வாங்காது. மிரட்டல்களுக்கும் அஞ்ச சாது. அக்டோபர் 10-ம் தேதி, இந்தச் சர்வாதிகாரத்தின் முடிவுக்கான தொடக்கமாக வரலாற்றில் இடம்பெறும் என அதில் பதிவிட்டுள்ளார்.

கருகும் நெற்பயிர்களுக்கு இழப்பீடு வழங்கக் கோரி

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தினர் வயலில் இறங்கி ஆர்ப்பாட்டம்!

தஞ்சாவூர், அக்.12-

தஞ்சாவூர் மாவட்டம் பாபநாசம் தாலுகா அம்மா பேட்டை ஒன்றியம் ரெங் கநாதபுரம் சுற்றியுள்ள பகு தியில் சுமார் 1000ஏக்கரில் சம்பா நெல் சாகுபடி செய் யப்பட்டுள்ளது. இந்த நிலையில் சம்பா பயிர்கள் நீரின்றி கருகும் நிலை ஏற் பட்டுள்ளதால், தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தை சேர்ந்த விவசாயிகள் நேற்று வயலில் இறங்கி, கைகளில் கொடிகளை ஏ ந் தி , க ண் ட ன முழக்கங்கள் எழுப்பினர். இதில் ஏராளமான விவசா யிகள் பங்கேற்றனர். தொடர்ந்து விவசாயிகள் போதுமான நீர் இருப்பு இல்லாததால் மேட்டூர் அணையில் இருந்து ஜூன் 12ம் தேதி திறக்க வேண் டிய தண்ணீர் 81 நாட்க ளுக்குப் பிறகு செப்டம்பர் 1ம் தேதி திறக்கப்பட்டு டெல்டா மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் சம்பா சாகுபடி நடவு செய் யப்பட்டுள்ள நிலையில் பயிர்கள் முழுவதுமாக கருகி வருகிறது.

பம்ப் செட்டிலிருந்து வரக்கூடிய தண்ணீர் உப்பு நீராகவும் பயிர்கள் கருகி, டிராக்டரை வைத்து மீண் டும் உழுது வருவதால் பெரிய அளவில் மனக்கஷ் டத்தை அனுபவித்து வரும் சூழ்நிலையில், அருகில் இருக்கும் வேளாண் துறை அமைச்சரோ, அதிகாரி களோ, வருவாய்த்துறையி னரோ பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையி டாமல் இருப்பது விவசாயி களுக்கு வேதனை அளிப்ப தாக தெரிவித்தனர்.

மெலட்டூர், ரெங்கநாத புரம், விழிதியூர், அன்னப் பன்பேட்டை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் ஆயி ரக்கணக்கான ஏக்கர் சம்பா சாகுபடி பயிர்கள் கருகி முழுவதுமாக அழிந்து போய் விட்ட நிலையில் கை டிராக்டரை வைத்து உழக்கூடிய நிலைமை கவலை அளிப்பதாகவும், சம்பந்தப்பட்ட அதிகாரி கள் பயிர்களை ஆய்வு செய்து உரிய இழப்பீடு வழங்கவில்லை என்றால், தஞ்சை மாவட்ட கலெக் டர் அலுவலகத்தை தமிழ் நாடு விவசாயிகள் சங்கம் முற்றுகையிடும் என்றும் தெரிவித்தனர்.

மயிலாடுதுறை காங். எம்.எல்.ஏ.வுக்கு எதிராக

அரசு மருத்துவர்கள், செவிலியர்கள் புகார்: மாவட்ட ஆட்சியரைச் சந்தித்து மனு அளித்தனர்!

மயிலாடுதுறை, அக்.12-

மயிலாடுதுறையில் உள்ள அரசு தலைமை மருத்துவமனையில் கடந்த 7ம் தேதி காங்கிரஸ் எம். எல்.ஏ. ஜமால் முகம்மது யூனூஸ் திடீர் ஆய்வு மேற்கொண்டார். அப் போது அரசு தலைமை மருத்துவர் மருதவாணன் தலைமையில் ஆய்வு கூட் டம் நடந்தது. இந்த கூட் டத்திலும் எம்.எல்.ஏ. கலந்து கொண்டார். அப் போது அரசு மருத்துவர் கள், செவிலியர்களை எம். எல்.ஏ. திட்டி பேசியதாக கூறப்படுகிறது. இவ்வாறு திட்டி பேசியதை எம்எல்ஏ தனது முகநூல் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

இது மருத்துவர்கள், செவிலியர்கள் இடையே அதிர்ச்சியை ஏற்படுத்தி யுள்ளது. அந்தவீடியோவில் பேசும் எம்.எல்.ஏ. ஜமால் முகம்மது யூனூஸ், அரசு இலவசமாக கொடுக்கும் திட்டங்கள் மக்களுக்கு சென்று சேர வேண்டும். மருத்துவமனைக்கு வரும் நோயாளிகளுக்கு உரிய மரியாதை வழங்கப்படுவ தில்லை.

உங்களால் வேலை பார்க்க முடிந்தால் பாருங் கள். இல்லாவிட்டால் நீங் களே ட்ரான்ஸ்பர் வாங் கிக் கொண்டு போய் விடுங்கள். தலைமை மருத் துவர் நடவடிக்கை எடுக்கா விட்டால் நானே மருத்துவ மனையில் போராட்டம் நடத்தும் நிலை ஏற்படும் என எச்சரிக்கிறார். இதுகு றித்து, இந்திய மருத்துவ கழகம் சார்பில் மருத்துவர் கள் மற்றும் செவிலியர்கள் மயிலாடுதுறை கலெக்ட ரைச் நேரில் சந்தித்து புகார் மனு அளித்தனர். உரிய நட வடிக்கை எடுக்காவிட் டால் மருத்துவமனையில் தர்ணா போராட்டம் நடத் துவது குறித்தும் மருத்துவர் கள் ஆலோசித்து வருகின்ற னர். இந்த சம்பவத்தால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

பிரதமர் மோடியை வரவேற்க வைக்கப்பட்ட

திருவள்ளுவர் சிலைக்கு காவி உடை!

தமிழ் ஆர்வலர்கள் கண்டனம்!

சென்னை, அக்.12-

சென்னை போரூரில் அய்யன் திருவள்ளுவர் சிலைக்கு காவி உடை அணிவித்து பா.ஜ.க. அட்டூழி யத்தில் ஈடுபட்டது அதிர்ச்சியை ஏற் படுத்தி யுள்ளது.

பூந்தமல்லி முதல் வடபழனி வரையிலான மெட்ரோ ரயில் நிலை யத்தை திறந்து வைப்பதற்காக பிரத மர் மோடி இன்று சென்னைக்கு வருகை தர உள்ளார். பிரதமரை வர வேற்கும் வகையில் போரூர் பைபாஸ் மெட்ரோ ரயில் நிலையம் அருகே திருவள்ளுவருக்கு காவி உடை அணிவித்து பாஜக சார்பில் சிலை வைக்கப்பட்டுள்ளது அதிர்ச் சியை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ்நாட்டில் தொடர்ச்சியாக திருவள்ளுவருக்கு மத சாயம் பூசும் வகையில் காவி உடையணிந்த திரு வள்ளுவர் சிலைகளை பாஜக சார் பாக நடத்தப்படும் அனைத்து நிகழ்ச் சிகளிலும் வைப்பது வழக்கமாக உள்ளது. உலகப் பொதுமறையான திருக்குறளை உலகத்துக்கு தந்த திருவள்ளுவர் மதச்சார்பற்ற மதம், சாதி என அனைத்தையும் கடந்து அனை வருக்குமானவர் திமுக உள் ளிட்ட கட்சிகள் இதற்கு பலமுறை எதிர்ப்பு தெரிவித்தும் இந்த போக்கு நீடித்து வருகிறது. பா.ஜ.க.வின் செயலுக்கு தமிழ் ஆர்வலர்களும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

எவ்வளவு வலியுறுத்தியும் கேட்காத பா.ஜ.க. அரசு!

ஒன்றிய உள்துறைச் செயலாளருக்கு உச்சநீதிமன்றம் நோட்டீஸ்!

புதுடெல்லி,அக்.12-

ஐந்தர் மந்தர் போராட் டத்தின் போது, போராட் டக்காரர்களை தடுக்கி றோம் என்று சொல்லிக்கொண்டு பொது பே ரா க் கு வ ர த் தை முடக்கக்கூடாது என்று உச் சநீதிமன்றம் உத்தரவிட்டி ருந்தது. ஆனால், இந்த உத் தரவை மீறி.. டெல்லியில் பல மெட்ரோ நிலையங்கள் மூ ட ப் ப ட் டி ரு ந் த ன . எனவே நீதிமன்ற அவம திப்பு குறித்து ஒன்றிய அர சுக்கு நீதிமன்றம் விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப் பியிருக்கிறது.

அதிகாரிகள் நீதிமன்ற உத்தரவை மீறியுள்ளது முதற்கட்டமாக உறுதியாகி யுள்ளதாக குறிப்பிட்டு, இந்த வழக்கில் நாளை அக்டோபர் 13 விளக்க அறிக்கை தாக்கல் செய்ய நீதிமன்றம் உத்தரவிட்டி ருக்கிறது.

தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமா ருக்கு எதிராக காக்ரோச் ஜனதா கட்சி மற்றும் எதிர்க் கட்சிகள் டெல்லியில் அக்.10 அன்று பெரிய பே ரா ட் ட த் தி ற் கு அழைப்பு விடுத்திருந்தன. இதையொட்டி, பாதுகாப்பு காரணங்களுக்காக டெல்லி யில் உள்ள 57 மெட்ரோ ரயில் நிலையங்களை மூட வும், ரயில்களை ரத்து செய் யவும் அதிகாரிகள் திட்ட மிட்டனர். இதை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கை அக்.9 அன்று உச்சநீதிமன் றம் விசாரித்தது. அப்போது "பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் மெட்ரோ மற்றும் ரயில் சேவைகளை முழுமை யாக மூடக்கூடாது. கட்டுப் படுத்தப்பட்ட முறையில் ரயில்களை இயக்க வேண் டும்" என்று உத்தரவிட்டது.

நீதிமன்றத்தின் இந்த தெளிவான உத்தரவு இருந் தபோதும், அக்.9 இரவு தொடங்கி அக்.10 மாலை வரை டெல்லியில் 45 மெட்ரோ ரயில் நிலையங்க ளின் நுழைவு மற்றும் வெளி யேறும் வாயில்கள் முழுமை யாக மூடப்பட்டன. ரயில்க ளும் தொடர்ந்து ரத்து செய் யப்பட்டன. நீதிமன்ற உத் தரவை அதிகாரிகள் திட்ட மிட்டு மீறிவிட்டதாக கூறி வழக்கறிஞர் சைலேந்திர மணி திரிபாதி உச்சநீதிமன் றத்தில் அவமதிப்பு வழக்கை தொடர்ந்தார்.

இந்த அவமதிப்பு மனுவை நீதிபதிகள் ஜாய் மால்யா பாக்சி மற்றும் வி. மோகனா ஆகியோர் அடங் கிய அமர்வு இன்று அவசர வழக்காக எடுத்துக் கொண்டு சிறப்பு விசார ணையை நடத்தியது. விசா ர ணை யி ன் பே து மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆதாரங்க ளின் அடிப்படையில் அதி காரிகள் நீதிமன்ற உத்த ரவை மீறியதற்கான முதற்கட்ட முகாந்திரம் இருப்பதாக நீதிபதிகள் ஒப் புக்கொண்டனர்.

எனவே நீதிமன்ற அவம திப்பு காரணமாக, ஒன்றிய உள்துறை அமைச்சக செய லாளரான கோவிந்த் மோகன் ஐஏஎஸ், டெல்லி காவல்துறை ஆணையர் அனுராக் குமார், டெல்லி மெட்ரோ ரயில் கழகத் தலைவர் டி.தாரா ஐஏஎஸ் என 3 உயர் அதிகாரிகளுக்கு உச்சநீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பியிருக்கிறது.

நீதிமன்ற அவமதிப்பு நட வடிக்கை ஏன் உங்கள் மீது எடுக்கப்படக் கூடாது என் பதற்கான காரணங்களை விளக்கி நாளை அக்.13 உரிய விளக்க பிரமாண பத் திரத்தையும் நீதிமன்ற உத்த ரவை அமல்படுத்தியதற் கான இணக்க அறிக்கையை யும் தாக்கல் செய்ய வேண் டும் என்று அதிகாரிகளுக்கு உச்சநீதிமன்றம் அதிரடி உத் தரவு பிறப்பித்திருக்கிறது. இந்த உத்தரவு டெல்லி மற் றும் ஒன்றிய அரசுக்கு பின் னடைவாக பார்க்கப்படுகி றது.